**செய்தி வெளியீடு எண் : 1563** **நாள் : 10.09.2022**

**செய்தி வெளியீடு**

இங்கிலாந்து நாட்டில் கேம்பர்ளி நகரில், முல்லைப் பெரியாறு அணையை உருவாக்கி தென்தமிழ் நாட்டின் நீர் வளத்திற்கு வித்திட்ட கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களுக்கு திருவுருவச் சிலை நிறுவப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்ததை தொடர்ந்து, இன்று (10.09.2022) தமிழ்நாடு அரசின் சார்பில் நிறுவப்பட்டுள்ள சிலையை திறந்து வைப்பதற்காக விரிவான ஏற்பாடுகளுடன் திறப்பு விழா நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் இங்கிலாந்து மகாராணியார் மறைவை ஒட்டி சிலைத் திறப்பிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டுவிட்டது.

கேம்பர்ளி நகரில் நிறுவப்பட்ட சிலையை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி, செய்தி மக்கள் தொடர்பு துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் இ.ஆ.ப மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கம்பம் ராமகிருஷ்ணன் திரு.கோ.தளபதி, திரு மகாராஜன் மற்றும் கேம்பர்ளி தமிழ் பிரிட்டிஷ் சங்க நிர்வாகிகள் ஆகியோர் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட சிலையினை பார்வையிட்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in